தொல்லையையும். அன்னிய நாட்டு செலாவணி நிலைமையால் பற்றாக்குறை ஏற்பட்டதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. பவுன் நாணயமதிப்பு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட சாதகமான நிலைமை மறைந்ததும், மேற்கத்திய நாடுகள் சாமான்களைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் முயற்சியின் முதல் கட்டம் முதல் கட்டம் முடிவடைந்து பிற வெளிநாடுகளில் ஏற்றுமதிக்கு கிராக்கிகள் குறைந்து போனதும் காரணமாக, இந்தியாவின் ஏற்றுமதிகளின் அளவு குறைந்து போயிற்று. இறக்குமதியின் அளவும், இறக்குமதி விலைகளும் அதிகரித்தன. இந்த வருஷத்தில் ஏற்றுமதிகள் மூலம் கிடைத்த வருமானம் அதிகமாகவே இருந்தபோதிலும் இறக்குமதிகளுக்கு அதிகத் தொகைகளை செலுத்த வேண்டியிருந்ததால்தான் இது சரிக்கட்டப்பட்டுவிட்டது. __டாலர் நிலைமை:__ டாலர் நிலைமை 1950-ம் வருஷம் இருந்ததைவிட மோசமாகவே இருந்தது. உணவும் பருத்தியும் பெருமளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருந்ததும், அவற்றின் விலைகளும் கப்பல் கட்டணங்களும் அதிகரித்திருந்ததும் இதற்குக் காரணமாகும். இந்த வருஷத்தில் ஒரு கோடியே நாற்பது லட்சம் டாலர் பற்றாக்குறை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1950ம் வருஷத்தில் இந்தியா ஸ்டர்லிங் பிரதேச மத்திய ரிஸர்வ்களுக்கு 7 கோடியே 10 லட்சம் டாலர் செலுத்தியிருக்கிறது. டாலர் நிலைமையால் ஏற்பட்ட சிக்கல் ஸ்டெர்லிங் பிரதேசம் முழுவதையுமே பாதித்திருக்கிறது. அமெரிக்காவின் பொருள் சேகரிப்புத் திட்டத்தின் வேகம் குறைந்தது காரணமாக ஒரு பக்கத்தில் டாலர் வருமானம் குறைந்துக் கொண்டே இருக்கையில் டாலர் பிரதேசத்திலிருந்து இறக்குமதிகள் அதிகமாகிக் கொண்டேயிருந்தன. பாரசீகத்திலிருந்து எண்ணெய் சப்ளைகள் நின்று போனதால் இவற்றையும் டாலர் பிரதேசத்திலிருந்து பெற வேண்டியதாயிற்று. இவை காரணமாக 1951-ம் ஆண்டின் மத்திய ரிஸர்வ்கள் 96 கோடியே 50 லட்சம் டாலர் குறைந்து போயிற்று. கொழும்பில் நடைபெற்ற காமன்வெல்த் நிதிமந்திரிகள் கூட்டத்தில் இந்நிலைமை பரிசீலனை செய்யப்பட்டது. அந்நிய நாட்டு செலாவணி வகையில் ஸ்டெர்லிங் பிரதேசம் முழுவதும் 1952-ம் வருஷ இறுதிக்குள் உலகத்தின் பிறபாகங்களுடன் சமநிலை அடைந்து விட வேண்டும் என்றும், அதை அடைவதற்கான வழிகளை அந்தந்த நாட்டின் முடிவுக்கே விட்டுவிட வேண்டுமென்றும் நிதிமந்திரிகள் மகாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஸ்டெர்லிங் நாணயம் இறுதியாக உலகத்தின் பிரதான செலாவணிகள் எல்லாவற்றிலும் [illegible] மாற்றக்கூடியபடி செய்வதே லட்சியமாகும். __டாலர் கடன்கள்:__ ஒவ்வொரு நாடும் அதனுடைய சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்வதற்கு டாலர் கடன்கள் பெறுவதற்குள்ள மார்க்கங்களை ஆராய வேண்டியது அவசியமென்றும் அக்கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது. இந்தியா போலவே, [illegible] அபிவிருத்தித் திட்டங்கள் முதலியவற்றுக்காக சர்வதேச புனர் நிர்மாண அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக அந்த பாங்கின் தூது கோஷ்டியொன்று 1951 நவம்பரில் இந்நாட்டுக்கு விஜயம் செய்தது. தேசீய திட்டங்களை நிறைவேற்றி வைக்க இந்தியா தயாராயிருப்பதையும் உறுதி கொண்டிருப்பதையும் கண்டு அந்த கோஷ்டியின் அங்கத்தினர்கள் பெரிதும் திருப்தி அடைந்தனர். இந்தியாவின் பொருளாதார நிலைமைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் தாமே நேரில் பார்த்துத் தெரிந்துக் கொள்வதற்காக அந்த பாங்கின் தலைவர் கூட இந்தியாவுக்கு வந்திருந்தார். பாங்கிலிருந்து மேலும் கடன் வாங்குவதைப் பற்றி பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. கோதுமை வாங்குவதற்காக அமெரிக்க சர்க்கார் கொடுத்த 19 கோடி டாலர் கடனும் இந்திய சர்க்காருக்கு பெரும் உதவியாக இருந்தது. இந்தக் கடன் தொகையைக் கொண்டு வாங்கப்பட்ட உணவு தானியங்களின் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணம் ஒரு விசேஷ அபிவிருத்தி நிதியாக சேர்க்கப்பட்டு, அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்கும் ராஜ்ய சர்க்கார்களுக்குப் பண உதவி அளிப்பதற்கும் பயன்படுத்தப்படும். அந்நிய நாட்டு செலாவணி நிலைமை அடுத்த வருஷத்தில் 1951-ல் இருந்ததைவிட மேலாக இருக்கும் என்று தோன்றவில்லை. ஆனால் அத்தியாவசிய இறக்குமதிகளுக்குக் கணிசமான அளவில் பணம் கொடுத்தே ஆக வேண்டியிருக்கும். உலக மார்க்கெட்டின் விலைவாசிகள் இன்னமும் உயர்வாகவே இருந்துவருவதுதான் இறக்குமதிகளுக்கு இந்தியா செலுத்த வேண்டிய தொகைகளும் அதிகமாகவே இருக்கக்கூடும். __ஸ்டர்லிங் நிலுவைகள்:__ அடுத்த ஆறு வருடங்களுக்கு ஸ்டர்லிங் நிலுவைகளை விடுவிப்பது சம்பந்தமாக 1951ல் ஏற்பட்ட உடன்பாடு சமீபத்தில் செய்துக்கொள்ளப்பட்ட கடிதப்பரிவர்த்தனை மூலம் உர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது. மொத்தக் கணக்கிலிருந்து வைப்புக் கணக்குக்கு 31 கோடி பவுன் மாற்றப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை செலாவணி ரிஸர்வாக வைக்கப்படும். 1957 ஜூன் முடிய ஆறுவருஷங்களுக்கு ஒவ்வொரு வருஷத்திலும் 3 கோடியே 5 லட்சம் பவுன் வீதம் ஆண்டுதோறும் விடுவிக்கப்பட்டுவரும். இந்த ஆறு வருஷ இறுதியில் ஸ்டர்லிங் நிலுவை செலாவணி ரிஸர்விற்குத் தேவையுள்ள தொகையாகக் குறைந்துவிடும். __1951-52 நிதிவருஷம்:__ 1952-1951ம் வருஷத்தின் ரெவின்யூ வருமானங்கள் 497.6 கோடி ரூபாயும் செலவு 405.06 ரூபாயும் இருக்குமென்றும், 92.61 கோடி ரூபாய் உபரி இருக்குமென்றும் இப்போது மதிப்பிடப்படுகிறது. சென்ற பட்ஜெட்டில் இவ்வுபரி 26.1 கோடி ரூபாய் உபரி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. ~~[illegible]~~ல் சுங்கத்தீர்வைகள் மூலம் 76 கோடி ரூபாயும் வருமான வரிகள் மூலம்